அறிமுக நூல் – 6

# பெரும்பாணாற்றுப்படை



இரா.இளங்குமரனார்

அறிமுக நூல் வரிசை – ௬

# பெரும்பாணாற்றுப்படை

இரா. இளங்குமரன்

# அறிமுகத்திற்கு அறிமுகம்

தொடக்க நாளிலேயே 'செந்தமிழ்' எனப்பட்ட நம்மொழி, இப்பொழுது 'செம்மொழி' என்னும் சிறப்பை நடுவண் அரசால் அடைந்திருக்கிறது. அத் தகுதிக்குக் காரணமாக இருந்த நூல்களை எல்லாம் இளம்பருவ மாணவர்களும், ஓரளவே தமிழ்ப் பயிற்சியுடைய பெரியவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் 'அறிமுகநூல்கள்' வெளியிட வேண்டும் என்று அவாவினார், அன்புத் தோன்றல், செயல்வீறுமிக்க தன்மானத் தமிழர், புரட்சிக் கவிஞர் மன்ற நிறுவனர் தமிழ்த்திரு **பி.வரதராசனார்**. அவர் விருப்பை நிறைவேற்றும் வகையிலும், என் எண்ணப்பதிவும் அதில் ஒன்றியதாலும், தொடர்ந்து செம்மொழிக்கு உரியவும் பிறவகையால் தமிழ்வளமாவதுமாம் கலை வள நூல்களையும் அறிமுக நூல்களாக வெளியிட இசைந்தேன்.

அவ்வரிசையில் தொல்காப்பியம், திருக்குறள், திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை என்பவற்றை அடுத்துச் செம்மொழி நூல்வரிசையுள் ஆறாவதாக வெளிவருவது இப் பெரும்பாணாற்றுப்படை. பத்துப்பாட்டில் நான்காவதாக இடம் பெறும் இந்நூல், ஆற்றுப்படை வரிசையிலும் நான்காவதாம்.

முன்னைத் தொல்காப்பிய, திருக்குறள் அறிமுக நூல்கள் பெற்ற வரவேற்பும், அவ்வெளியீட்டில் கண்ட விற்பனைப் பெருக்கமும், பருகுவார் போல் கேட்ட அவையச் சிறப்பும், பரப்புதல் உந்துதல் அவர்களுக்கு உண்டாகிய தமிழ்ப்பயனும், நூலாசிரியனுக்கும், வெளியீட்டினர்க்கும் பேருவகை ஆவதாம்! 'தமிழ்மொழி' 'இனமீட்பர் பெருகுவர்' என்னும் நம்பிக்கையைப் பெருக்குதல் நற்பேறாம். ஆதலால், இத்தொடர் தொய்வின்றித் தொடர்வதுடன், பெருக்கத் தொடராகச் சிறக்கத் தூண்டும் என்பதும் உறுதியாம்.

பரப்பாளர் என்பார், புரப்பாளருமாம் சிறப்பு வெளிப்பாடு இஃதாம்.

வாழிய நலனே!

வாழிய நிலனே!


இன்ப அன்புடன்,

**இரா. இளங்குமரன்**

திருவள்ளுவர் தவச்சாலை,

அல்லூர், திருச்சி-620 101

## வெளியிட்டு மகிழும்




## புரட்சிக் கவிஞர் மன்றம்

75, வடக்குமாசி வீதி, மதுரை-1
அலைப்பேசி : 94437 10219

அச்சிட்டு மகிழும்






# மணியம்மை
## மழலையர் தொடக்கப்பள்ளி

வடக்குமாசி வீதி, மதுரை-1
தொலைப்பேசி : 0452 2626111

# பெரும்பாணாற்றுப்படை

**★ பத்துப்பாட்டில் பெரும்பாணாற்றுப் படையின் இடம் எது? ஆற்றுப்படை வரிசையில் அதன் இடம் எது?**

பத்துப்பாட்டில் பெரும்பாணாற்றுப்படையின் இடம் நான்காவது ஆகும்.

அவ்வாறே ஆற்றுப்படை நூல்களிலும் பெரும்பாணாற்றுப் படை நான்காவது ஆகும்.

**★ பெரும்பாணாற்றுப்படையைப் பாடியவரும் பாடப்பட்டவனும் எவர்?**

பெரும்பாணாற்றுப் படையைப் பாடியவர், கடியலூர் உருத்திரங் கண்ணனார். பாடப்பட்டவன் தொண்டைமான் இளந்திரையன்.

**★ கடியலூர் உருத்திரங் கண்ணனார் பெயரால் அறியப்படுவது என்ன?**

இவர் ஊர், கடியலூர் என்பதும்;

தந்தையார் பெயர், உருத்திரன் என்பதும்;

இவர் பெயர், கண்ணனார் என்பதும் அறியப்படுகின்றன.

**★ கடியலூர் உருத்திரங்கண்ணனார் இயற்றியன வாகக் கிடைத்துள்ள பாடல்கள் எவை?**

பெரும்பாணாற்றுப்படையை அன்றிப் பத்துப்பாட்டில் ஒன்பதாவதாக விளங்கும் பட்டினப்பாலையும் இவர் பாடியதே. குறுந்தொகையில் 352-ஆம் பாடலும், அகநானூற்றில் 167-ஆம் பாடலும் இவர் பாடியனவாக உள்ளன.

**★ தொண்டைமான் இளந்திரையனைப் பற்றி வரும் செய்தி என்ன?**

இவன் பெயரால் தொண்டை நாட்டை ஆட்சி புரிந்தவன் என்பதும், இவன் பெயர் இளந்திரையன் என்பதும், இவன் பாடு புகழ் பெற்றவன் என்பதும் அறிய வருகின்றன. கடியலூர் உருத்திரங் கண்ணனார் கரிகாற்சோழனைப் பற்றியும் பாடியிருத்தலால், கரிகாலன் காலத்தவர் என்பதும் அறிப்படும். **இளமைப் பருவத்திலேயே முதுமைத் தோற்றம் உடையவனும் மூதறிவு உடையவனுமாக விளங்கியதால் இளந்திரையன்** எனப் பெயர் பெற்றான் எனக் கொள்வது இயற்கையொடு பொருந்திய செய்தியாம்.

**★ தொண்டைநாடு என்பது எது? அதன் தலைநகர் எது?**

செங்கற்பட்டு, மாமல்லபுரம், காஞ்சிபுரம், சென்னைப்பகுதி முதலியவை பழந்தொண்டை நாடு ஆகும்; தலைநகர் காஞ்சிபுரம் ஆகும்.

**★ பெரும்பாணாற்றுப்படை என்பதன் பொருள் என்ன?**

பரிசு பெற்று வந்த பெரும்பாணன் ஒருவன், பரிசு பெறவிரும்பிய பெரும்பாணனுக்குத், தான் பரிசு பெற்றஇடத்தையும், அவ்விடத்துக்குச் செல்லும் வழியையும், வழியின் நிலையையும், ஆங்குள்ள மக்கள் இயல்புகளையும், கொடைவள்ளல் சிறப்புகளையும், அவன் தரும் பரிசில் சிறப்பையும் கூறுவதாக அமைந்தது பெரும்பாணாற்றுப் படையாம்.

**★ பாடிய ஆசிரியர் பாணர் இனத்தவரா; பாணாற்றுப்படையாகப் பாடுவது ஏன்?**

பாணர் என்பார் பாட்டும் கூத்தும் இசையும் வல்ல கூட்டத்தார். பாடியவரோ புலமைச் சான்றோர். அவர், பெரும்பாணன் ஒருவன் மற்றொரு பெரும்பாணனுக்குத் தாம் பெற்ற நலத்தை அவனும் பெறவேண்டும் என்று எண்ணித் தாமே தம்மைப் பாணராகக் கொண்டு பாடியது இதுவாகும். மற்றைஆற்றுப்படைகளும் இப்படி அமைந்தவையே!

**★ ஆற்றுப்படுத்துவானும், ஆற்றுப்படுவானும் பெரும்பாணன் என்பது எப்படி விளங்குகிறது?**

"புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண"

என்பதால் (22) பாணன் என்பதும்,

"பேரியாழ் முறையுளிக் கழிப்பி"

என்பதால் (462) பெரும்பாணன் என்பதும் புலப்படும். பேரியாழ் கொண்டதால் பெரும்பாணன் எனப்பட்டான்.

**★ பெரும்பாணன் யாழ் எத்தகையது?**

உள்நாக்கில்லாத வறுவாய் உடையது; அதன் கோடு; பிறைநிலா நின்றாற், போன்றது; வார்க்கட்டு, மகளிர் அணியும் வளையல் போன்றது; கரிய பெரிய தண்டு, நீலமணியை வரிசையாகப் பதித்தாற் போன்றது; நரம்புகள், பொற் கம்பிகளைப் போன்றன. போர்வை, விரியாத கமுகம் பூவைப் போலத் தோலால் தைக்கப்பட்டு மூடப்பட்டது (6-15).

**★ பரிசு பெற்றபாணன், பரிசு பெற வருவானுக்குக் கூறியதென்ன?**

பரிசு பெற்றபாணன், பரிசு பெறவிரும்பி அலையும் பாணனை நோக்கி, பொலிவிழந்த தோற்றமும், கற்றகலையை வெறுக்கும் உள்ளமும் உடைய பாணனே, யான் தொண்டைமான் ஆட்சிபுரியும் காஞ்சி மாநகரில் இருந்து வருகின்றேன். குறையாச் செல்வம், குதிரை யானை ஆயவற்றைப் பரிசிலாகப் பெற்று வருகிறேன். மூவேந்தரினும் மேம்பட்ட கொடையாளனாக விளங்கும் இளந்திரையனை நீங்கள் கண்டால் உங்கள் வறுமை ஒழியும்" என்றான்(20-37).

**★ இளந்திரையன் ஆட்சிச் சிறப்பாகப் பாணன் கூறியவை எவை?**

"அவன் ஆட்சியில், வழியே செல்வோரை வருத்தும் கள்வர் இலர்; இடியும் தாக்காது; பாம்பும் தீண்டாது; காட்டு விலங்குகளும் துன்புறுத்த மாட்டா. ஆதலால், உங்களுக்குச் சோர்வு உண்டாகும் இடத்துத் தங்கிச் செல்லலாம். அவன் ஆட்சிச் சிறப்பு அத்தகையது" என்றான் (38-45).

**★ உப்பு வணிகரைப் பற்றி ஆற்றுப்படையான் கூறுவதென்ன?**

"உப்பு வணிகர் வண்டிகளின் குடம், மத்தளம் போன்றது. தினைப்புனம் காப்பவர் இருக்கும் 'பரண்கூரை' போன்ற கூண்டு உடையது; அதன் முன்னே கோழிக் கூடுகள் இருக்கும்; யானையின் துதிக்கை போலும் உறிகட்டித் தொங்கவிடப் பட்டிருக்கும். விரிந்து கட்டப்பட்ட புளிங்காடிப் பானைகள் இருக்கும்; வண்டியை உமணப் பெண்டு ஓட்டுவள்; அவள் கையில், பிள்ளையை வைத்திருப்பாள்; பிள்ளைக்குக் காப்பாக வேப்பிலை வைத்திருப்பாள். உமணர் தழைமாலை அணிந்திருப்பர். வண்டி இழுக்கும் மாடுகள் தளர்ந்து போனால், மாற்று மாடுகளைப் பூட்டி ஓட்டுவர்; ஆதலால், பல மாடுகளைக் கொண்டு செல்வர்; வண்டியில் அச்சை நன்கு கண்காணிப்பர்; உப்பின் விலை கூறி விற்பர். பலவாகப் பிரியும் வழிகள் உண்டு" என உப்பு வணிகரைப் பற்றிக் கூறுகிறான்(46-65).

**★ பிறநாட்டு வணிகர்களைப் பற்றி ஆற்றுப்படுப்போன் கூறியதென்ன?**

"வெளிநாட்டு வணிகர், முத்து மாணிக்கம் சந்தனம் விற்பர். அவர்கள் மார்பில் காயம்பட்டிருக்கும்; இடுப்பில் உடைவாள் இருக்கும்; காலில் மூடு செருப்பு அணிந்திருப்பர்; மிளகு ஏற்றிச் செல்லும் கழுதைகளின் பின்னே செல்வர். கவர் வழிகளில், சுங்கம் வாங்குவோர் இருப்பர்", என்கிறான்.

**★ பாலைநில மக்களாம் வேடர் வாழ்க்கை பற்றி அறிவதென்ன?**

"எயினர் எனப்படும் வேடர் குடிசை, ஈந்தின் ஓலை வேயப்பட்டது. அணிலும், எலியும் உள்புக முடியாதது. எயிற்றியர் அக்குடிசையின் புறத்தில் மான்தோல் விரித்து, மகவொடு படுத்திருப்பர்; மற்றையவர், கடப்பாறையால், எறும்புப் புற்றைஅகழ்ந்து, அங்குள்ள புல்லரிசியை எடுத்து, பார்வைமான் கட்டியுள்ள விளாமர நிழலில் உள்ள உரலில் இட்டுப், புல்லரிசியை இடிப்பர்; ஆழமான கிணற்றின் உவர்நீரை எடுத்து, உலையில்

இட்டுச் சோறாக்குவர். அங்குச் சென்றால் அவர்கள் ஆக்கிய சோற்றைத் தேக்கிலையில், உப்புக் கண்டத்துடன் வழங்குவர்" என்பவற்றை அறிகிறோம்.

**★ கானவர் வேட்டை பற்றியும் விருந்து பற்றியும் அறிவன எவை?**

"மழை வறண்ட காலத்தில், நீர் பெறுவதற்குத் தோண்டிய குழிகளில் மறைந்து இருந்து, இரவில் நீர் பருக வரும் பன்றிகளை வேட்டையாடுவர். பகல் பொழுதில், வேலிப்புறத்தே வலைகளை மாட்டி, நாய்களுடன் சென்று புதர்களைக் கலைத்து முயல்களை வலைகளில் சிக்க வைத்துப் பற்றுவர்.

அப்பகுதியைக் கடந்தால், எயினர் கோட்டை உண்டு. மதிற்சுவர், ஊகம் புல்லால் வேயப்பட்டது; முள் வேலியுடையது; காவல் காடு சூழ்ந்த வீடுகள் உண்டு. சங்கிலியால் கட்டப்பட்ட நாய்கள் காவல் செய்யும். வீட்டுள் வேல் கேடயம் வில் அம்பு பறை ஆயவை இருக்கும். நாய்கள் பற்றிக் கொண்டுவந்த உடும்பைப் பொரித்து விருந்து செய்வர்" என்பன அறிகிறோம்.

**★ குறிஞ்சி மலைவாணர் பற்றி அறிவன எவை?**

"குறிஞ்சிநில வாணர் கொள்ளையடித்தலால் வந்த உணவையும், போரிட்டு வென்று கொண்டு வந்த உணவையும் உடையவர். அவர் மகளிர், எதிரிட்டு யானை வந்தாலும், பாம்பு ஏறி வந்தாலும், இடி இடித்தாலும் அச்சம் இல்லாதவர். ஆடவர், பகைவர் பசுக்கூட்டங்களைக் கவர்ந்து வந்து, கள்ளுக்கு விலையாகத் தருவர். வீட்டில் வழங்கப்பட்ட கள்ளை உண்டு ஆட்டிறைச்சியைத் தின்று மத்தளம் கொட்ட ஊர் நடுவமைந்த மரத்தடியில் ஆடுவர்" என்பவற்றை அறிகிறோம்.

**★ முல்லை நில ஆயர், அவர்கள் குடியிருப்பு-தொழில் பற்றிச் சுருங்க உரைக்க.**

"முல்லை நில ஆயர்கள் உயரக் குறைவான மரக்கிளைகளைக் காலாக ஊன்றி வீட்டை அமைத்திருப்பர். அக்கால்களில் ஆடுகள் தின்னுமாறு குழைகள் கட்டப்பட்டிருக்கும்.

வீட்டின் கதவு கட்டில் ஆகியவையும் கயிற்றால் கட்டப்பட்டிருக்கும். கட்டிலின் மேல் வரகந்தாள் பரப்பி, அதன்மேல் கடாவின் தோலை விரித்துக், காவலாக முதியர் படுத்திருப்பர்.

ஆய்மகள் தயிர் கடைந்து வெண்ணெய் எடுப்பாள்; மோரைக் குறிஞ்சி நிலத்தில் விற்பாள்; நெய் விற்ற காசு கொண்டு, பொன் வாங்காமல் எருமை பசு முதலியவற்றை வாங்குவாள். ஆயர் சேரியில் நீங்கள் தங்கினால், தினைச் சோறும் பாலும் தருவர்.

ஆயர்கள் செருப்புகள் போட்டே காட்டில் திரிதலால், அவற்றின் தழும்பு இருக்கும். கோடரி பிடித்து வெட்டுதலால், கை காய்ப்பேறி இருக்கும்; இருபாலும் சுமையுள்ள காவடி தாங்குதலால், தோளும் காய்ப்பேறி இருக்கும்; பல்வகைப் பூக்களைப் பறித்து மாலையாகக் கட்டி அணிந்திருப்பர்; அரையில் ஓராடை உடுத்திருப்பர்; ஆக்களையும் கன்றுகளையும் புல்வெளியில் மேயவிட்டு விட்டு, மர நிழலில் இருந்து குழல்களால் பாலைப்பண் பாடுவர்; அதனை வெறுத்தால் குமிழ் மரத்தின் வளைத்துக்கட்டிய அரலையின் நரம்பைக், கையால் தெறித்துக் குறிஞ்சிப்பண் பாடுவர். இவ்விடையர் குடியிருப்பைக் கடந்து அப்பால் சென்றால், மந்தைகள் மிகுந்த ஊரைக் காண்பீர். யானைகள் நின்றாற் போன்ற குதிர்கள் மிக்கிருக்கும். வீட்டுச் சுவர்களில் வண்டிச் சக்கரம் கலப்பை ஆகியவை சார்த்தப் பட்டிருக்கும். வீடுகள் வரகந்தாள்களால் வேயப்பட்டிருக்கும். இவ்விடத்திற்கு நீங்கள் சென்றால், வரகரிசியுடன் அவரை விதையைக் கலந்து ஆக்கப்பட்ட கலவைச் சோற்றைஉண்ணத் தருவர்" என்கிறான்.

**★ உழவர் குடியிருப்புப் பற்றி ஆற்றுப்படுத்துபவன் கூறுவதென்ன?**

"ஆயர் குடியிருப்பைக் கடந்து செல்வீர்களானால் உழவர்கள் வாழும் மருதநிலப் பகுதியை அடைவீர். உழவர் உழுதுவிதைத்த பயிர்கள், விளை நிலங்களில் சிறந்து விளங்கும். பயிர்களின் அடியில் தங்கியிருந்த காடைகள் அறுப்புக் காலத்துக் கள வேலையாளர்களின் ஒலிக்கு அஞ்சித், தம் குஞ்சுகளோடு பறந்து முல்லை நிலத்துக்குச் சென்று தங்கும்.

நண்டுகள் அங்குள்ள வரப்பு வளைகளுள் தங்கியிருக்கும். எருமைகள் ஒன்றோடு ஒன்று முட்டி மோதி, நண்டு வளைகளைச் சிதைக்கும்; உழவர்கள் நிலத்தை உழுது பரம்படித்துச் சமன் செய்து நெல் நாற்றைநட்டுவர். உழவர் சிறுவர்கள், சண்பகத்தாதை மார்பில் பூசியிருப்பர்; முள்ளிப்பூவை நாரால் தொடுத்து மாலையாக அணிவர்; பழஞ்சோறு உண்ண விரும்பாமல், அவல் இடித்து உண்பர்; இடிக்கும் ஓசைக்கு அஞ்சிக் கிளிகள் செல்லும்.

நெல்லை அறுப்பவர் அறுத்துக்கட்டி மருத மர நிழலில் போர் போடுவர். கடாவிட்டு மிதித்துத் தூற்றி நெல்லை மலைபோல் குவிப்பர்; இத்தகைய மருத நிலக் குடியிருப்புகளில் தங்கினால், நெற்சோற்றைக் கோழியிறைச்சிப் பொரியலோடு வழங்குவர்" என்று கூறுகிறான்.

**★ கரும்பு ஆலை பற்றி அறியும் செய்தி என்ன?**

மருத நிலப் பகுதியில், புகை சூழ்ந்த கொட்டில்கள் காணப்படும். அவை கரும்பை ஆட்டிச் சாறு எடுத்துக் கட்டியாக்கும் ஆலைகள் ஆகும். அங்கே சென்றால் கரும்புச்சாறும், கருப்புக் கட்டியும் பெறலாம் என்பதை அறிகிறோம்.

**★ மீனவர் குடியிருப்புப் பற்றிய செய்திகளைத் தொகுத்துரைக்க.**

"கரும்பு ஆலை ஆடும் பகுதியைக் கடந்தால், மீனவர் குடியிருப்புத் தோன்றும், அவர்கள் வீடுகள், காஞ்சி வஞ்சி முதலிய மரங்களின் கொம்புகளைக் கால்களாக உடையவை; மூங்கில் வரிச்சுகளைத் தாழை நாரால் கட்டப்பட்டவை; தருப்பைப்புல்லால் வேயப்பட்டவை; அக்குடிசைகளின் கூரையின் மேல் சுரைக் கொடி படர்ந்திருக்கும்; அவை காய்களொடு விளங்கும். மீன் வலைகள் முற்றத்தில் காயுமாறு பரப்பப்பட்டுக் கிடக்கும்.

சிறியவர்களும் பெரியவர்களும் முற்றங்களில் தங்கி இருப்பர். குளங்களுக்குச் சென்று மீன் பிடிப்பர். கொழியலரிசியை மாவாக்கிக் கழியாகத் துழாவிக் காய்ச்சுவர்; கூழாகிய அதனை, அகன்றதட்டங்களில் விட்டு ஆறச் செய்வர்; முளையிட்ட நெல்லை அவலாக இடித்து அதனோடு சேர்ப்பர்; அங்கே தங்கினால் அரிசிப் புளிங்காடியால் ஆகிய கள்ளை மீன் சூட்டோடு உண்ணத் தருவர்" என்பது மீனவர் குடியிருப்புப் பற்றிய செய்தியாகப் பெரும்பாணாற்றுப் படையால் அறியப்படுவதாம்.

**★ மீனவர் குடியிருப்பைக் கடந்தால் அடையும் குடியிருப்பு எது? அக்குடியிருப்புச் செய்திகளாக அறிவன எவை?**

"மீனவர் குடியிருப்பைக் கடந்தால் அடையும் குடியிருப்பு, பார்ப்பனர் குடியிருப்பாகும்.

அக்குடியிருப்பின் வீடுகள் மெழுகப்பட்டவை; பந்தல்களை உடையவை; பந்தல் கால்களில் பசுக் கன்றுகள் கட்டப்பட்டவை. கோழியும் நாயும் வீட்டுள் செல்லாதவை. வழிபடு தெய்வ உருவங்கள் வீட்டுள் உள்ளவை. கிளிகள் மறைகளை ஓதும்; கற்புடைய சிறந்த மகளிர் உயரிய உணவுகளை ஆக்குவர்; நெல்வகையுள் மேம்பட்ட நெல்லின் அரிசியால் சோறாக்குவர்; பொரியல் ஊறுகாய் என்பனவும் ஆக்குவர்; அவற்றைஉண்ணும்படி உங்களுக்குத் தருவர்" என்பது பார்ப்பனர் குடியிருப்புச் செய்திகளாம்.

**★ சிச்சிலிப் பறவை பற்றி ஆற்றுப்படுத்துபவன் கூறுவதென்ன?**

நீராடும் துறைகளில், மகளிர் கரையில் கழற்றி வைத்த குழை என்னும் காதணியை இரையாக எண்ணி எடுத்துக் கொண்டு சிச்சிலிப் பறவை மற்றவை அறியாமல் உண்பதற்கு வேள்வி செய்பவர். நட்டிய தூணத்தின் மேல் இருக்கும். அது யவனர் செய்த ஓதிம விளக்குப் போலவும் விடி வெள்ளி போலவும் தோற்றம் தரும் என்கிறான்.

★ **கடற்கரைக் காட்சியாக அறிவது என்ன?**

"மேற்கு கிழக்கு முதலாம் நாடுகளில் இருந்து கப்பலில் கொண்டு வரப்பட்ட குதிரைகள் நிற்கும்; பல்வேறு பண்டங்கள் கடற்கரைத் துறைமுகங்களில் குவிந்து கிடக்கும் மரக் கலங்கள் சூழ்ந்து நிற்கும்; பண்ட சாலைகளும் மனை மாளிகைகளும் ஓங்கி உயர்ந்திருக்கும். வயல்களில் உழும் எருதுகளைப் பசுக்கள் அடுத்துச் செல்லாதவாறு ஆட்டுக் கடாக்களும் நாய்களும் திரியும்.

மாடங்களில் மகளிர் மயில்களைப் போல உலாவுவர். சிலம்புகள், ஒலியெழுப்ப ஓடி ஆடிப் பந்தடிப்பர்; மணலில் விளையாடவும் செய்வர். கள் விற்கும் கடைகளும் காட்சி தரும். கள்ளைக் காய்ச்சிய வடிநீர் வெளியே தேங்கிச் சேறாகக் கிடக்கும். அங்குப் பன்றிகள் உலாவும்; உணவுக்காம் பன்றிகளை அங்கே திரிய விடாமல் வீட்டிலே அடைத்து மாப்பண்டம் தந்து வளர்ப்பர். அங்குச் சென்றால் கள்ளோடு பன்றிக் கறியும் உண்ணத் தருவர். கடற்கரையில் கலங்கரை விளக்கம் உயரமாக அமைந்திருக்கும். அவ்விடத்தைக் கடந்தால், தென்னங்கீற்றால் வேயப்பட்ட வீடுகள் இருக்கும். அவ்வீடுகளில் தங்கினால் இளநீர், வாழைப்பழம், நுங்கு முதலியனவும், பல்வேறு பண்டங்களும் பெற்று உண்டு மகிழலாம்" என்பவை கடற்கரைக் காட்சிகளாம்.

★ **திரு எஃகா பற்றி அறிவதென்ன? பெரும்பாணன் அது பற்றிக் கூறுவதென்ன?**

"பட்டினத்தைக் கடந்தால், பெருமாள் திருக்கோயில் கொண்ட திரு எஃகா என்றும் ஊரைக் காணலாம். ஆங்கு மாடங்கள் ஓங்கி நிற்கும்; மகளிர் வள்ளிக் கூத்து ஆடுவர்.

காந்தள் மலையில் யானை படுத்துக் கிடந்தாற் போலத் திருமால் கிடந்த கோலம் விளங்கும்.

செறிவுமிக்கதும் குயில் உறைந்து மகிழத்தக்கதும் வெயில் புகாததும் ஆகிய சோலைகளைக் காணலாம். குருக்கத்திப் பூக்கள் குழியில் தேங்கிய நீரின் மேல், பாலில் கிடக்கும் அப்பம் போல் காட்சி தரும். அச்சோலைகளில் மகரவாய் என்னும் தலைக்கோலம் அணிந்த மகளிர் விளையாடுவர். நீங்களும் அவர்களோடும் விளையாடலாம். உங்கள் யாழை மீட்டிப் பெருமானைப் பாடி அவ்விடத்தை விட்டுச் செல்லுங்கள்" என்கிறான் பெரும்பாணன்.

**★ காஞ்சி மாநகரைப் பற்றி அறியும் செய்திகள் எவை?**

திரு எஃகாவைக் கடந்தால், காஞ்சி மாநகரை அடையலாம். அங்கே யானைகளையும் பாகர்களையும் காணலாம். பாகர்கள் பாரா வகையில், யானைக்கு அவர்கள் இட்ட நெய் கலந்த சோற்றைச், சினை மந்திகள் கவர்ந்து சென்று உண்ணும். தேரோட்டத்தால் தெருக்கள் குழி விழுந்து கிடக்கும். வேறிடம் தேடிப் பெறவேண்டா நிலையில், வேண்டுவார்க்கு வேண்டியதற்கு மேல் கொடை வழங்குவர். பரிசிலர்க்கும் இரவலர்க்கும் எப்பொழுதும் அடைக்கப்படாத வாயிலை உடையது, காஞ்சி மாநகர். அந்நகரைச் சூழக் காவல் காடும் மதிலும் உண்டு. பூவாமல் காய்கின்ற பலா மரம் போன்ற பெருமையது காஞ்சி மாநகர். பல்வேறு சமயத்தவர்கள் பல்வேறு விழாக்களை எடுக்கும் விழா நகராகப் பொலிவது அது. துரியோதனன் முதலிய நூற்றுவரைக் களப் போரில் அழித்த தருமனைப் போன்றவீரமிக்க வேந்தன், தொண்டைமான் இளந்திரையன். அந்நகரில் இருந்து ஆட்சி புரிகிறான். பகைவரை அழிக்க வல்ல அவன் தன்னை அடைக்கலமாக வந்தவர்க்கும் பரிசிலர்க்கும் பரிவுமிக்க வள்ளலாகத் திகழ்வான். அவனைக் காண்பதற்காக வேந்தர்கள் கப்பத்தோடு காத்திருப்பர். அக்காட்சி, வெள்ளப் பெருக்குடைய கங்கையாற்றைக் கடப்பதற்குத் தம் பண்டங்களோடு காத்திருப்பவர்களைப் போலத் தோன்றும் என்று காஞ்சி மாநகரம் பற்றி கூறுகிறான்.

**★ தொண்டைமான் இளந்திரையன் பண்பு நலங்களாகப் பாணன் கூறுவனவற்றைக் கூறுக.**

தொண்டைமான் இளந்திரையன் கடல்மேல் எழுந்த கதிரவன் போன்றபொலிவமைந்த காட்சியன். அவன் வறியர்க்கும் இரவலர்க்கும் வரையறைஇல்லாமல் வழங்கும் வண்மையன். பரிசிலர் வேண்டுவனவற்றைச் சிறப்பு மிக வழங்குவான்.

அவன் தன் அமைச்சரோடு கொலுவிருக்கும் சமயம் பார்த்து யானைமேல் பாயும் அரிமாப் போலப் பகை மன்னர்களை அழிக்கும் வீறுமிக்க வேந்தனே,

பகைவரை அழித்து அவர்கள் முடிகளைப் பறித்த முழு வலிமையனே,

வீரமுடி சூடும் வேந்தனே,

மாறுபட்ட வேந்தரொடு கூடி இருக்கும் முறையைக் கொள்ளாதவனே, தொண்டைக் கொடி சூடிய வழி முறையனே,

வீரர்க்கு வீரனே,

பகைவர்க்குப் பகைவனே,

செல்வமுடையவரைச் சிறப்பிப்பவனே,

போர்ப் புகழில் நிலை பெற்றவனே,

பகையை அழிக்கும் முருகவேள் அன்னவனே, உன் புகழோ

சொல்லுக்கு அடங்காதது; ஏதோ சில நான் சொன்னேன்!

நீ நெடிது வாழ்வாயாக" என்று தொண்டைமான் பண்பு நலன்களைக் கூறுமாறு பாணன் கூறுகிறான்.

**★ பாணன் புகழுரை கேட்ட திரையன், செய்வனவாக ஆற்றுப்படுப்போன் கூறியதென்ன?**

"காட்டு வளமும், தெய்வ உறைவும், வேள்விச் சிறப்பும் மிக்க நாட்டையுடைய வேந்தன் இளந்திரையன், செல்வமும் நிலையாது, யாக்கையும் நிலையாது, புகழ் ஒன்றுமே என்றும் அழியாதது என உணர்ந்தவன். அதனால், உன்னை அழைத்து உன் உடலைச் சுற்றியுள்ள கந்தையை நீக்கிப் பட்டாடை உடுத்தச் செய்வான். உன்னைப் போலவே உன் சுற்றத்தாரும் உடுத்தச் செய்வான். பாகுபடச் சமைக்கப்பட்ட இறைச்சியொடு கலந்த சோற்றையும் சுவைமிக்க மற்றைஉணவுகளையும் வெள்ளிக் கலங்களில் இட்டு உன் சுற்றத்துடன் உண்ணச் செய்வான். விறலி சூடுமாறு பொன் மாலையும் பொற்றாமரையும் வழங்குவான். வெள்ளைக் குதிரைகள் பூட்டிய அழகிய தேரில் பல்வகைப் பொருள்களும் நிரப்பி அன்போடு அனுப்புவான்! வறுமையில் நலிந்த பாணனே, மேலும் காலம் தாழ்த்தாமல் வழியே சென்று வரிசைகளைப் பெற்று இனிது வாழ்வாயாக" என்று வாழ்த்தி விடுத்தான் ஆற்றுப்படுக்கும் பெரும்பாணன்.

★ **திரையன் என்பதன் விளக்கத்தைக் கூறுக.**

திரை யாவது அலை, முதுமைக் குறி. எ–டு: நரை திரை.

மாமல்லைவரை தொண்டைநாடு இருந்தமையால் சேரன், 'சேர்ப்பன்' என வழங்கப்பட்டது போல், திரையுடைய கடலுக்கு உரியவன் திரையன் எனப்பட்டான் எனல் தகும். ஆனால் அதற்கொரு புனைவுக் கதையை நச்சினார்க் கினியர் கூறுகிறார்.

"நாகப்பட்டினத்துச் சோழன் பிலத் துவாரத்தால் நாகலோகத்தே சென்று, நாக கன்னியைப் புணர்ந்த காலத்து அவள் யான் பெற்றபுதல்வனை என் செய்வேன் என்றபொழுது, தொண்டைக் கொடியை அடையாளமாகக் கட்டிக் கடலிலே விட அவன் வந்து கரையேறின், அவற்கு யான் அரசுரிமையை எய்துவித்து நாட்டாட்சி கொடுப்பல் என்று அவன் கூற, அவளும் அவள் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரை தருதலின், திரையன் என்று பெயர் பெற்றதாகக் கூறினார்" என்கிறார்.

இது, 'திரைதரு மரபின் உரவோன் உம்பல்' என்றும் பெரும்பாணாற்றுப் படை அடிக்குக் கூறும் விளக்கமாகும். இளந்திரையன் இக்கதைக்கு உரியவன் அல்லன் என்பது 'மரபின்' என்பதால் விளங்கும். அவள் பீலிவளை எனப்படுவாள் என்பது மணிமேகலையால் அறியப்படுவதாம்.

★ **தொண்டைமான் இளந்திரையன் ஆளும் வகை அறிந்து ஆட்சி செய்ய வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கியவன் என்பது எதனால்?**

தொண்டைமான் இளந்திரையன் பாடல் வல்லான். அவன் பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

ஆட்சி என்னும் தேரை நடத்துபவன் செம்மையானவனாகவும் ஆட்சித் திறம் உடையோனாகவும் இருக்க வேண்டும். தேரைச் செலுத்தும் வலவன் தக்கோன் அல்லாதவன் எனின், காலமெல்லாம் பகைச் சேற்றுள் பட்டுப் பலப் பல தீமைகளை அடைய நேரும். தக்கவன் எனின் எவ்விடையூறும் இல்லாமல் செல்ல வேண்டிய இடத்தைச் செவ்வையாக அடையலாம் என்னும் கருத்துடைய பாட்டு அது.

"கால்பார் கோத்து ஞாலத் தியக்கும்
காவல் சாகாடு உகைப்போன் மாணின்
ஊறின்று ஆகி ஆறுஇனிது படுமே;
உய்த்தல் தேற்றா னாயின் வைகலும்
பகைக் கூழ் அள்ளல் பட்டு
மிகப் பல் தீ நோய் தலைத்தலைத் தருமே"

என்பது அப்புறநானூற்றுப் பாடல்: 185. அரசனே ஆட்சி இலக்கணம் வகுத்துக் கூறியது தனிச்சிறப்பு அல்லவா!

★ **காவல் செம்மையான நாட்டு நிலையை, ஆசிரியர் கண்ணனார் எவ்வாறு கூறுகிறார்.**

காட்டு வழி நடப்பவர்க்குக் கள்வர் அச்சம் இராது என்பதை,

"அத்தம் செல்வோர் அலறத் தாக்கிக்
கைப்பொருள் வௌவும் களவேர் வாழ்க்கைக்
கொடியோர் இன்றவன் கடியுடை வியன்புலம்"

என்று குறிப்பிடுகிறார் (39-41)

★ **கொடைச் சிறப்பை எப்படிக் காட்டுகிறார் கண்ணனார்?**

"கொடையும் கோளும் வழங்குநர்த் தடுத்த
அடையா வாயில்"

என்பதால் காட்டுகிறார் (400-401)

கொடுப்பதற்கும் கொள்வதற்கும் வேறிடம் தேட வேண்டா, இவ்விடம் ஒன்றேபோதும் என்னுமாறு அடைக்கப்படாத வாயிலை உடையது என்பதால் விளங்கச் செய்கிறார்.

★ **புதிய சொற்படைப்பாளர் உருத்திரங்கண்ணனார் என்பதை விளக்குக.**

மேலை நாட்டில் இருந்து வந்ததாகக் கருதப்படும் மூடு செருப்பை 'அடிபுதை அரணம்' என்பதாலும், நான்கு என்பதை 'நால்கு' என்பதாலும் காட்டுதல் வழி அறியலாம்.

**★ மாற்றுப் பெயர் தந்து மனங் கவர்பவர் ஆசிரியர் என்பதற்குச் சான்று தருக.**

கதிரோனை, "பகல் செய் மண்டிலம்" என்றும் (442)

பொற்றாமரையை, "ஆடுவண் டிமிரா அழலவிர் தாமரை" என்றும் (481)

ஒருவகை அரிசியைப் "பறவைப் பெயர்ப்படு அத்தம்" என்றும் (305)

ஓரூர்ப் பெயரை 'நீர்ப் பெயற் றெல்லை' என்றும் (319)

குறிப்பிடுவன போல்வன சான்றாம்.

**★ கொல்லர் உலைக்களம், கரும்பு ஆலை, ஞெலிகோல் – குறிப்பு வரைக.**

கொல்லர் உலைக்களத்தில் காணப்படும் துருத்தி அந்நாளில், கையால் அசையாமல் கால் மிதியால் இயங்கியது என்பதையும், கரும்பை ஆட்டும் ஆலையும், அதனைக் கட்டியாக்கும் செயலும் ஒருங்கே நிகழ்ந்தது என்பதையும், தீக்கடை கோலால் தீ உண்டாக்கப்பட்டது என்பதையம் அறிகிறோம். ஞெலிகோல் தீக்கடைகோல்.

**★ கலங்கரை விளக்கம் பற்றிக் கடியலூரார் கூறுவதென்ன?**

"உரவு நீர் அழுவத்து ஓடுகலம் கரையும்

துறை" என்கிறார் (350–51)

**★ வடநாட்டுத் தொடர்பான செய்திகள் வழக்கில் ஊன்றியமை எவற்றால் அறியலாம்?**

பாண்டவர்க்கும் துரியோதனன் முதலோர்க்கும் நிகழ்ந்த பாரதப் போரையும், கங்கையைப் பற்றியும் இவர் கூறுவதால் அக்கால வடநாட்டுத் தொடர்பை அறியலாம். "வடபால் செம்பொன் மலை" என்பதாலும் அறியலாம்.

**★ வெளிநாட்டுத் தொடர்பு இருந்தமையைக் கண்ணனார் எவ்வாறு குறிக்கிறார்?**

'யவனர் ஓதிம விளக்கு' (317) ஓதிமம் = அன்னம்.

என்பதால் கட்டுகிறார்.

**★ குடிநலம் காப்பவளாய் ஆயர் மகள் விளங்குவதை எவ்வாறு தெளிவிக்கிறார்?**

"அளைவிலை உணவில் கிளையுடன் அருத்தி

நெய்விலை ஈட்டிப் பசும்பொன் கொள்ளாள்

எருமை நல்லான் கருநாகு பெறூஉம்"

என்பதால் (163-165) ஆய்மகள் குடிநலக் காவல் புலப்படும்.

தயிரையும் நெய்யையும் விற்றுத் தம் உறவுடன் உண்டு, எஞ்சியதைக் கொண்டு, தங்கம் வாங்காமல் மாடும், கன்றும் வாங்கிப் பெருகச் செய்வாள் என்பது உயர்குடி நலக் காப்பாம்.

**★ உல்கு என்பது என்ன? அதைப் பற்றி அறிவதென்ன?**

உல்கு என்பது சுங்க வரியாகும். வணிகர்களிடம் வாங்கும் வரி அது.

"உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்"

என்பது அது (81) பெருவழி பிரியும் இடத்தில் சுங்கச்சாவடி இருந்தது என்பது எண்ணத்தக்கதாம்.

**★ கடியலூரார் சிறந்த உவமையாளர் என்பதற்குச் சான்று தருக.**

இலவ நெற்று வெடித்துப் பஞ்சு எழும்பிய தோற்றத்தை, அணில் வரிக்கு ஒப்பிடுகிறார் (84-85) முயற் காதைத், தாமரைப் பூவின் இதழோடு ஒப்பிடுகிறார் (114-115) நண்டின் குஞ்சுக்குத் தினையரிசிச் சோற்றை ஒப்பிடுகிறார். அவர் தம் நுண்ணிய நோக்குச் சிறப்பாம் இன்னவை.

★ **இளந்திரையனை முருகனுக்கு ஒப்பிட்ட ஆசிரியர் பாடலை முடிக்கும் சிறப்பு நயமென்ன?**

"கடம்பமர் நெடுவேள் அன்ன மீளி" என்பவர்(75)

"ஒளிறிலங்கு அருவி மலைகிழ வோனே" (500)

என முடிப்பது பொருத்த மிக்கதாம். மலைகிழவோன் என்போன் முருகன் எனப்படுதலால்!

"பழமுதிர் சோலை மலைகிழ வோனே"

என்பது திருமுருகாற்றுப்படையின் இறுதியடி.

நன்கொடை ரூ.15 ஆக்கம் : பெரியார்

அறிமுக நூல் – 6

# பெரும்பாணாற்றுப்படை



இரா.இளங்குமரனார்

ஆக்கம் : பெரியார்